**செய்தி வெளியீடு எண் : 1648** **நாள் : 21.09.2022**

# மாபெரும் கொலு பொம்மை, கலை நயமிக்க மண்பாண்டங்கள், பீங்கான் பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்க விழா நடைபெற்றது

********

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் தமிழகத்திலுள்ள கைவினைஞர்களை ஊக்குவித்து அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திட ஆண்டுதோறும் நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு சென்னை குறளகம் கட்டிடத்தில் உள்ள கதரங்காடியின் தரைத் தளத்தில் கொலு பொம்மை கண்காட்சி மற்றும் விற்பனை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இதனால் கைவினைஞர்களுக்கு நல்லதொரு சந்தை வாய்ப்பு கிடைப்பதுடன், கூடுதல் வருவாய் பெற்று பயனடைந்து வருகின்றனர். அவ்வாறே இவ்வாண்டும் கொலு பொம்மை கண்காட்சியுடன் கலைநயமிக்க, மதிப்புக் கூட்டப்பட்ட மண்பாண்டங்கள் மற்றும் பீங்கான் பொருட்களின் விற்பனை கண்காட்சியும் நடத்தப்படுகிறது.

இவ்விற்பனை துவக்க விழாவின் போது, சிறுதானியங்களான தினை, சாமை, கேழ்வரகு, குதிரைவாலி, வரகு மற்றும் மூங்கில் அரிசி போன்றவைகளை வேளாண் பெருமக்கள்/ வேளாண் உற்பத்தி குழுக்களிடமிருந்து கொள்முதல் செய்து, **"காதி கோல்டு"** என்ற பெயரில் ½ கிலோ கொள்ளளவு கொண்ட பெட் பாட்டில்களில் நிரப்பி விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

அதோடு சிவகங்கை மாவட்டம், கண்டனூர் அலகில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய இரக **"காதி திரவ சலவை சோப்பு"** எனும் புதிய சலவை சோப்பு இரகம் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

இக்கண்காட்சியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள கைவினைஞர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியோரால் தயாரிக்கப்படும் வண்ணமிகு நிறங்களில் காண்போரைக் கவரும் வண்ணம், தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட தெய்வீக சிலைகள்,மண்பொம்மைகள், மரப்பொம்மைகள், காகிதக் கூழ் பொம்மைகள், கற்சிற்பங்கள், மற்றும் மார்பிள் சிற்பங்கள், அரசு மனநலக்காப்பகத்தில் உள்ள உள் நோயாளிகளால் தயாரிக்கப்படும்

கைவினைப் பொருட்கள், பூம்புகார் நிறுவனத்தின் கைவினைப் பொருட்கள், பனை ஓலைப் பொருட்கள் போன்ற பல விதமான பொருட்களுக்காக 27 அரங்குகளும், மண்பாண்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் PMEGP பயனாளிகளால் தயாரிக்கப்படும் கலைநயமிக்க டெரகோட்டா வகை பொம்மைகள்,மதிப்புக் கூட்டப்பட்ட மண்பாண்டங்கள் மற்றும் பீங்கான் பொருட்களுக்கென 8 அரங்குகளும் சேர்த்து மொத்தம் 35 அரங்குகள் அமைக்கப்பட்டு அதனில் காட்சிப்படுத்தி, விற்பனை செய்யப்படவுள்ளது. இதனில் குறிப்பாக நீலகிரி மாவட்டத்தை சார்ந்த **கோத்தர் இன பழங்குடியினரால்** உற்பத்தி செய்யப்படும் கலைநயமிக்க மண்பாண்டங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் இவ்வாண்டிற்க்கான புதிய வகை பொம்மைகளான சப்தரிஷிகள், கிருஷ்ணர் வனபோஜனம், வீரராகவ உற்சவ பெருமாள், சொர்ண ஆகாச பைரவர் மற்றும் காவேரி செட் போன்ற புதிய வகை பொம்மைகள் பிரத்யேகமாக இடம் பெற்றுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற ஏழை எளிய கிராமப்புற கைவினைஞர்கள் தங்களது தயாரிப்புகளை எளிதில் சந்தைப்படுத்த இந்த கண்காட்சி பெரிதும் துணை புரிந்து வருகிறது.

கடந்த ஆண்டு விற்பனை குறியீடாக ரூ.1.50 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ.85.94 இலட்சம் மதிப்பிலான பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டது. இதனால் 40 கைவினைஞர்கள் நேரடியாகவும், 500–க்கு மேற்பட்டவர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெற்றனர்.

நடப்பு விற்பனை கண்காட்சிக்கு ரூ.1.50 கோடி மதிப்பிலான பொம்மைகள், கைவினைப் பொருட்கள் விற்பனை செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 60 கைவினைஞர்கள் நேரடியாகவும், 700–க்கு மேற்பட்டவர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெறுவார்கள்.

இன்று (21.09.2022) குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் கலந்து கொண்டு,குத்து விளக்கேற்றி கொலு பொம்மை,கலை நயமிக்க மண்பாண்டங்கள் மற்றும் பீங்கான்

பொருட்களின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, **கொலு பொம்மை, "காதி கோல்டு"** என பெயரிட்ட சிறுதானியங்கள் விற்பனைக்கு அறிமுகம் செய்தார்கள்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் கலை நயமிக்க மண்பாண்டங்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் **காதி திரவ சலவை சோப்பு"** ஆகியவற்றை விற்பனைக்கு அறிமுகம் செய்தார்கள்.

இவ்விழாவிற்கு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் அரசு முதன்மை செயலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். அதோடு, கடந்த ஆண்டின், கொலு பொம்மைக் கண்காட்சியில் அதிகளவில் விற்பனை செய்த முதல் மூன்று கைவினைஞர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்களும், மாமன்ற உறுப்பினர் திருமதி. கே.சரஸ்வதி அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் முனைவர் பொ.சங்கர். இ.ஆ.ப அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.இவ்விழாவில்,அரசு உயர் அதிகாரிகள், கதர் வாரியப் பணியாளர்கள், பொது மக்கள், பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in